# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஏப்ரல் 20, 2018 Weekly E-paper ● April 20, 2018

மத்திய அரசே

# ஆளுநரைத் திரும்பப் பெறு!





சுப.வீரபாண்டியன்

பல்கலைக்கழக நடவடிக்கைகளில் தலையிடுவதற்கே மாநில அரசுக்கு உரிமையில்லை என்று சொல்கிறார் தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித். பிறகு பல்கலைக்கழக இணைவேந்தராக மாநிலக் கல்வி அமைச்சர் ஏன் நியமிக்கப்படுகிறார்?

போகிற போக்கைப் பார்த்தால், நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தின்போது, அரசு எழுதிக் கொடுக்கும் உரையை நான் படிக்க மாட்டேன், நானேதான் சொந்தமாக உரை எழுதிப் படிப்பேன் என்றும், அமைச்சர்கள் பதவிப் பிரமாணத்தை நான்தான் நடத்தி வைக்கிறேன் என்பதால், முதலமைச்சர், அமைச்சர்கள் எல்லோரையும் நான்தான் நியமிப்பேன் என்றும் அடுத்தகட்ட அறிவிப்பை ஆளுநரிடம் நாம் எதிர்பார்க்கலாம்.

பேராசிரியர் நிர்மலா தேவி தொலைபேசிச் சிக்கலில் இன்று ஆளுநர் பெயர் அடிபடுகிறது. ஆனால் அதற்கும் விசாரணை ஆணையத்தை ஆளுநரே நியமிக்கிறார். அனைத்தும் அத்து மீறிய செயல்களாக உள்ளன. இந்த ஆளுநர் தொடர்ந்து பதவியில் நீடித்தால், தமிழ்நாட்டில் ஜனநாயகம், மாநில சுயாட்சி ஆகியவை எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடும்.

ஆளுநரின் இந்தப் போக்கை மத்திய அரசு கண்டிக்காமல் மௌனமாக இருக்குமானால், மத்திய அரசின் ஒப்புதலின் பெயரில்தான் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஆளுநர் செயல்படுகிறார் என்று ஆகிவிடும்.

ஆளுநரைத் திரும்ப அழைத்துக் கொள்வதே மத்திய அரசு, தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்கிறது என்பதற்கு அடையாளமாக இருக்கும்!

# 50 ஆண்டு கால ஆட்சியில்...

*15 ஆவது நிதிக்குழுவில் தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களுக்கு குறிப்பாகத் தென் மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு குறைய வாய்ப்புள்ளது என்று செய்திகள் கூறுகின்றன. அதனையொட்டித் தமிழகத்தின் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், நிதிக்குழுத் தலைவர் என்.கே. சிங் அவர்களைப் பார்த்தபோது, "கவலை வேண்டாம், பார்த்துக்கொள்ளலாம்" என்று அவர் கூறியுள்ளார் என்றாலும், இறுதியில் உரிய நிதி நமக்கு வரப்போவதில்லை என்பதுதான் உண்மை.*

என்ன காரணம்? முன்பு 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை அடிப்படையாகக் கொண்டிருந்ததாகவும், இப்போது 2001 ஆம் ஆண்டுக் கணக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவும் கூறுகின்றனர். 2001 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, தமிழகம் வளர்ந்த மாநிலமாக உள்ளது என்பதால் நிதி குறையும் என்கின்றனர்.

இங்கே நமக்கு ஓர் ஐயம் எழுகின்றது. தொட்டதற்கெல்லாம், கடந்த 50 ஆண்டு காலத் திராவிட ஆட்சியில் (திமுக, அ.தி.மு.க. இரண்டு கட்சிகளின் ஆட்சிகளை ஒரே கணக்கில் வைப்பது நமக்கு உடன்பாடில்லை என்பது ஒரு புறமிருக்கட்டும்) தமிழகம் பின் தங்கிவிட்டது என்று சொல்லிக்கொண்டே இருக்கின்றனர். இப்போது எப்படி வளர்ந்த மாநிலம் ஆகிவிட்டது? இது யாருடைய ஆட்சியில் நடந்துள்ளது?

தேர்தல் வந்தால், தமிழ்நாடு திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் பின்தங்கி விட்டது என்கின்றனர். நிதி கேட்டால், தமிழ்நாடு வளர்ந்த மாநிலம் என்கின்றனர். எது உண்மை?

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## ஆசிஃபா பாலியல்–படுகொலை எதிர்ப்பு




**ஆ**சிஃபா - மீதான பாலியல் வன்முறை மற்றும் படுகொலையைக் கண்டித்து 15.04.2018 அன்று சென்னை மண்ணடியில் த.மு.மு.க. ஆர்ப்பாட்டத்தின் போது.

## வன்கொடுமை தடுப்புச் சட்டம் எதிர்ப்பு





**வ**ன்கொடுமைத் தடுப்புச் சட்டைத்தை நீர்த்துப் போகுமாறு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து 16.04.2018 அன்று சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்



## கைது செய் எச்.ராஜாவை

**“இ**னிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று” என்று மனித இனத்திற்கே சொன்னவர் திருவள்ளுவர்.

எது இனியது, எது இன்னாதது என்பதை இன்றைய குழந்தைகள் கூடச் சொல்லும். அந்த அளவுக்கு அறிவு வளர்ச்சி பெற்ற காலம் இது.

வெள்ளத் தனைய மலர் நீட்டம்...

எச்.ராஜாவுக்கோ வெள்ளத்தைத் தாண்டி நாக்கு நீட்டம்.

பொது மேடையானாலும் சரி, சமூக வலைதளங்களானாலும் சரி, செய்தியாளர்களிடம் பேசினாலும் சரி தரம்தாழ்ந்த சொற்கள், கருத்துகளைக் கூறுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார் அவர்.

அருவெறுக்கத்தக்க வகையில் தனி நபர்களைத் தாக்கிப் பேசுவதற்குக் கொஞ்சமும் கூச்சப்படாத மனிதர்.

பார்ப்பனியத்தால் ஒடுக்கப்பட்டவர்கள் பெண்கள். இன்று அந்த பார்ப்பனியத்தை உடைத்துக் கொண்டு சமூக அரசியலில் வெளிவருகிறார்கள் அவர்கள்.

இதைக் கூடப் பொறுக்க முடியாத எச்.ராஜா அவர்களையும் தரம் தாழ்ந்து பேசிக்கொண்டிருக்கின்றார் இன்று, நாக்கூச்சம் இல்லாமல்.

“பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை விமர்சிக்கப்படுவது மன வேதனையைத் தருகிறது” என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜன் சொன்னாலும், இவரும் கூட எச்.ராஜாவை நேரடியாகச் சுட்டிக் காட்டவில்லை.

இப்படிப்பட்ட ஒருவரை தங்கள் கட்சியின் தேசியச் செயலாளராக வைத்திருப்பதற்காக பா.ஜ.க. சற்றும் வெட்கப்படவில்லை. நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

தமிழகத்தில் நியாயமான பல்வேறு போராட்டங்களை ஒடுக்கி வருகின்ற தமிழக அ.தி.மு.க. அரசு, எவ்வளவுதான் எச்.ராஜா எப்படித்தான் கேவலமாகப் பேசினாலும் அதைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படுவதில்லை.

இதனால் ஏற்பட்ட தைரியம்தான் எச்.ராஜாவுக்கு பாதுகாப்புக் கவசமாக அமைகிறது.

ராஜாவின் பேச்சும் செயலும் அமைதியாக வாழும் தமிழக மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தும்.

சாதிக் கலவரம், மதக் கலவரம் ஏற்பட வழிவகுக்கிறது எச்.ராஜாவின் தொடர் பேச்சுகள்.

வடக்கே தோழர் லெனின் உருவச் சிலையை பெயர்த்தெடுத்த சங்பரிவார் செயலை வரவேற்ற ராஜா, தமிழ்நாட்டில் பெரியார் சிலைகளைத் தகர்ப்போம் என்று சொன்னதன் விளைவாக, தமிழகத்தில் பெரியார் சிலைகள் உடைக்கப்பட்டன. கலவரங்களும் ஏற்பட்டன.

ஒரு காடு எரிய ஒரு தீக்குச்சி போதும்.

வரும் முன் காப்பது அரசுக்கு அழகு.

நாவடக்கம் அற்ற, குழப்பங்களை விளைவிக்கின்ற, சமூக நல்லிணக்கங்களுக்கு எதிரான எச்.ராஜா என்ற அந்த மனிதரை உடனே குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்.

அவரைச் சிறையில் அடைக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் நியாயமான கோரிக்கையை அ.தி.மு.க. அரசு நிறைவேற்ற வேண்டும்.

# வன்கொடுமைத் தடுப்புச்சட்டமும், உச்சநீதிமன்றத் தீர்ப்பும்

● வெற்றிச்செல்வன்



**DISPOSAL OF CASES BY COURTS**

| Year | Cases for trial | Pending trial at year-end | Trial over | Convictions (of the total cases where trial over) |
|---|---|---|---|---|
| **CRIMES AGAINST SCs** | | | | |
| 2010 | 40,481 | 31,932 (78.9%) | 8,406 | 3,225 (38.4%) |
| 2011 | 40,435 | 32,788 (81%) | 7,595 | 2,333 (30.7%) |
| 2012 | 41,826 | 35,645 (85.2%) | 5,708 | 1,074 (18.8%) |
| 2013 | 45,531 | 39,582 (86.9%) | 5,832 | 984 (16.9%) |
| 2014 | 46,407 | 41,226 (88.8%) | 5,141 | 820 (16%) |
| 2015 | 46,027 | 40,789 (88.6%) | 5,089 | 922 (18%) |
| 2016 | 45,286 | 41,191 (91%) | 4,048 | 659 (16.3%) |
| **CRIMES AGAINST STs** | | | | |
| 2010 | 4,766 | 3,978 (83.5%) | 772 | 205 (26.6%) |
| 2011 | 4,808 | 3,767 (78.3%) | 1,004 | 140 (13.9%) |
| 2012 | 4,684 | 3,747 (80%) | 606 | 59 (9.7%) |
| 2013 | 4,767 | 4,049 (84.9%) | 709 | 58 (8.2%) |
| 2014 | 5,416 | 4,747 (87.6%) | 663 | 87 (13.1%) |
| 2015 | 5,338 | 4,445 (83.3%) | 867 | 110 (12.7%) |
| 2016 | 5,071 | 4,571 (90.1%) | 498 | 42 (8.4%) |

*Source: NCRB data from 2010 to 2016. Includes only cases under the Atrocities Act, and not those in conjunction with IPC Sections*

தாழ்த்தப்பட்ட வகுப்பையோ, பிற்படுத்தப்பட்ட வகுப்பையோ சேர்ந்த நீதிபதி கூட இன்று உயர்நீதிமன்றத்தில் இல்லை. உயர்நீதிமன்ற நீதிபதி மேல்சாதியைச் சேர்ந்தவராக ஆகிவிட்டதால், மற்ற நீதிபதிகள் அவர் தயவுக்காக அவர் செய்யக்கூடியதற்கு மேலாகவே செய்து பயனடையப் பார்க்கிறார்கள்.

– தந்தை பெரியார் (விடுதலை,16.03.1968)

“சாப்பிடக்கூடாத அல்லது அருவெறுப்பான ஒன்றை உண்ண வற்புறுத்துவது குற்றமாகும்”. உலகம் நாகரிகத்தின் உச்சத்தைத் தொட்டுவிட்டதாகக் கருதும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இப்படியெல்லாம் கூட குற்றங்கள் நிகழுமா என்று நாம் ஆச்சரியப்படலாம். ஆம்! பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் சொல்லும் வன்கொடுமைகளில் முதலாவதாகப் பட்டியலிடப்பட்டு இருப்பதுதான் இது.

சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் 1989 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது இச்சட்டம். உச்சநீதிமன்றம் அண்மையில் இச்சட்டத்தை நீர்த்துப் போகும் வகையில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக நடைபெற்ற நாடு தழுவிய போராட்டத்தில் தலித்துகள் ஒன்பது பேர் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளனர்.

பட்டியல் வகுப்பினருக்கு எதிரான குற்றங்கள் இன்றைய பாஜக ஆட்சியில் நாடு முழுவதும் அதிகரித்து வருகின்றன. 2015ல், வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 38, 670. 2016ல் இது 40, 801 ஆக அதிகரித்துள்ளது. ஆனால் தண்டிக்கப்பட்டவர்களோ வெறும் 15.4 விழுக்காடு மட்டுமே. (தேசிய குற்ற ஆவணக் காப்பகம், 2017 ஆண்டறிக்கை)

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரியான சுபாஷ் காசிநாத் என்பவர் தன் மீது அரசியல் காரணங்களுக்காக வன்கொடுமை தடுப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறி உச்ச நீதிமன்றத்தை நாடியதில், “வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அரசு ஊழியர் மீது தொடுக்கப்படும் புகார் மீது உடனடி நடவடிக்கை கூடாது. டி.எஸ்.பி. தலைமையில் விசாரணை நடத்தி, அதன் பின்னர் முகாந்திரம் இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். மேல் அதிகாரி உத்தரவுடன் கைது செய்யலாம்” என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. இத்தீர்ப்பைத் தொடர்ந்து போராட்டங்களால் ஏற்பட்ட கலவரங்களில் தான் ஒன்பது பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப் பட்டனர். இத்தீர்ப்பின் மீது நடுவண் அரசு தாக்கல் செய்த சீராய்வு மனுவை நிராகரித்துள்ளது உச்ச நீதிமன்றம்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் முக்கியப் பிரிவைப் பலவீனப்படுத்தியதன் மூலம், ஒடுக்கப்பட்டோரின் சமூக நீதிக்கான பயணத்தில் மேலும் ஒரு தடைக்கல்லை உச்ச நீதிமன்றம் ஏற்படுத்தியுள்ளது வேதனைக்குரியது. ●

---

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

● இராகிலாதேவி

**“கொலை வாளினை எடடா-மிகு**
**கொடியோர் செயல் அறவே”**

என்று போர்ப்பரணி பாடிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் நினைவுநாள் ஏப்ரல் 21.

புதுச்சேரியில் (29.04.1891) பிறந்த பாரதிதாசன் சமுதாயச் சீர்திருத்தம், கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, பெண் விடுதலை, மூடநம்பிக்கை ஒழிப்பு குறித்துப் பல்வேறு பாடல்களை இயற்றிய திராவிட இயக்கக் கவிஞராவார்.

இந்நாள்களில் இராமராஜ்ஜியம் குறித்துப் பொய்யான பரப்புரை செய்யப்பட்டு வருகிறது. கவிஞரோ,

”பன்னீ ராயிரம் பாடிய கம்பனும்
இப்பொது மக்கள்பால் இன்தமிழ் உணர்வை
எழுப்பிய துண்டோ இல்லவே இல்லை”

என்றும், “இராமாயணம் என்ற நலிவுதரும்கதை” (சஞ்சீவி பர்வதத்தின் சாரல்) என்றும் அன்றைய காலகட்டத்திலேயே இராமாயணத்தை, அதனை இயற்றிய கம்பரை இடித்துரைத்துள்ளார்.

தமக்குப்பின் ஒருபாட்டுப் பரம்பரையையே விட்டுச் சென்றவர் கவிஞர். ஆஷ் கொலை வழக்கில் தொடர்புடைய மாடசாமி, புதுச்சேரி வந்தபோது அவரைக் காவலருக்குத் தெரியாமல் கட்டுமரத்தில் ஏற்றி நடுக்கடல் வரை கொண்டு சென்று வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்த நெஞ்சுரம் மிக்கவர் புரட்சிக் கவிஞராவார்.

”பிள்ளை பெறுவது என்பது பெண்களின் கடமை அல்ல; அவர்களது உரிமை. அவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டல் அவர்களைப் பிள்ளை பெற்றுக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தக்கூடாது” என்று பெண்ணுரிமைக் குரல் கொடுத்த தந்தை பெரியாரின் கருத்தை, ”காதலுக்கு வழிவிட்டுக் கருப்பாதை சாத்த / கதவு ஒன்று கண்டறிவோம்” என்று கவிதையில் வடித்தார் கவிஞர். தமது முதல் நூலைக் குத்தூசி குருசாமியின் மனைவி குஞ்சிதம் அம்மையார் வெளியிட பெண்மைக்கு முன்னுரிமை தந்த செயல்வீரர் புரட்சிக் கவிஞர்.

”தொண்டு செய்து பழுத்த பழம்” என்ற பாடலால் தந்தை பெரியாரை நமது கண்முன்னே நிறுத்திய பகுத்தறிவுக் கவிஞரின் நினைவு நாளில், அவரது கவிதைக் கனவுகளை நனவாக்க உறுதி ஏற்போம். ●

## ‘தை’யே தமிழர் புத்தாண்டு

# ஆளுநர் ஆய்வு தொல்காப்பியத்திலுமா?

● சுப.வீரபாண்டியன்

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி திருக்குறளையும், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களையும் தங்களின் உரைகளில் மேற்கோள் காட்டுவது நமக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. பிரதமர் குறிப்பிட்ட குறள் எது என்பதைக் கண்டறியத் தமிழறிஞர்கள் பலராலும் கூட முடியவில்லை என்பது ஒரு புறம் இருக்க, திருக்குறள் பற்றி அவருக்குப் பேசத் தோன்றியதே என எண்ணி நாம் மகிழ்கின்றோம்.

இப்போது தன் பங்கிற்குத் தமிழ்நாட்டின் ஆளுநர் தொல்காப்பியத்தை மேற்கொள் காட்டி சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று கூறியிருக்கிறார். மராத்தியத்தில் பிறந்த அவர், தொல்காப்பியத்தில் ஆராய்ச்சி செய்து நம் புத்தாண்டைக் கண்டுபிடித்திருக்கிறார். அடடா! அவர் ஆய்வு நம்மைப் புல்லரிக்க வைக்கிறது.

தொல்காப்பியத்தில் ஓர் ஆண்டை ஆறு கால நிலைகளாகப் பிரித்து, அதில் சித்திரை மாதமே இளவேனிற்காலத்தில் தொடக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்கிறார். தமிழர்கள் ஓர் ஆண்டை ஆறு பருவங்களாகவும், ஒரு நாளை ஆறு சிறு பொழுதுகளாகவும் பிரித்துள்ளனர் என்பது உண்மைதான். ஆனால் சித்திரை மாதமே இளவேனிலின் தொடக்கம் என்று இதுவரை யாரும் சொன்னதில்லை.

சித்திரை இளவேனிலா, முதுவேனிலா என்று கண்டறிய எந்தப் பெரிய ஆராய்ச்சியும் தேவையில்லை. மாண்பமை ஆளுநர் அவர்கள், இந்தச் சித்திரையில் தன் மாளிகையை விட்டு வெளியே வந்து, ஒரு பகல் நேரத்தில் அரைமணி நேரம் நடந்தால் போதும். இந்த மாதம் இளவேனில் இல்லை என்பதை கொட்டும் வியர்வை அவருக்கு உணர்த்திவிடும்.

அதை ஆய்வு செய்கிறேன், இதை ஆய்வு செய்கிறேன் என்று தொடங்கிய ஆளுநர் இப்போது தொல்காப்பிய ஆய்வில் இறங்கி விட்டார். ஆனால் தைமாதம்தான் தமிழர்களின் புத்தாண்டு என்று ஆய்வு செய்து முடிவெடுத்த தமிழ் அறிஞர்கள், ஆளுநர் புரோகித்தை விட சற்று அதிகமாகத் தமிழ் படித்தவர்கள். 1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும், 1939ஆம் ஆண்டு திருச்சியிலும் கூடி, திருவள்ளுவர் ஆண்டையும், தமிழ்ப் புத்தாண்டையும் முடிவு செய்த அவ்வறிஞர்கள் சிலரின் பெயர்களை நாம் பார்க்கலாம்;

1. மறைமலையடிகளார்
2. தேவநேயப் பாவாணர்
3. பேராசிரியர் க.நமச்சிவாயனார்
4. இ.மு.சுப்பிரமணியனார்
5. ந.மு.வே.நாட்டார்

இன்னும் அறிஞர்கள் பலர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்களின் முடிவை மலேசியாவில் வாழ்ந்த கோ. சாரங்கபாணியார் போன்றவர்களும் ஏற்றுக்கொண்டனர். இவர்களின் தமிழ் அறிவு, புரோகித்தின் தமிழ் அறிவிற்கு எந்தவிதத்திலும் குறைந்ததில்லை.



தமிழ் அறிஞர்கள் எடுத்த முடிவு, இரண்டு அடிப்படைகளால் ஆனவை. ஒன்று, நம் இனத்தின் முகமாகவும், முகவரியாகவும் உள்ள திருவள்ளுவரை அடிப்படையாகக் கொண்டது. இரண்டு, சூரியனிடமிருந்து பூமி தெற்கு நோக்கி (தட்சாயணம்) நகரத் தொடங்குவதை நோக்கியது.

நம் ஆளுநர் ஆராய்ச்சியின்படியே கூட, இளவேனில்தான் ஆண்டின் தொடக்கம் என்றால், தை-மாசி ஆகிய இரு மாதங்களே நமக்கு இளவேனில். அதனால்தான்

“பலர் தொகுபு இடித்த தாது உகுசுண்ணத்தர்

தகை செய் தீம் சேற்று இன்ன நீர்ப் பசுங்காய்,

நீடு கொடி இலையினர், கோடு சுடு நூற்றினர்”

என வரும் சங்க இலக்கியப் பாடல் ஒன்று (பத்துப்பாட்டு), வீட்டிற்குச் சுண்ணாம்பு அடித்தும், இலை கொடி தோரணம் கட்டியும், தெற்கே சென்று திரும்பியதற்காகக் கதிரவனுக்கு நன்றி கூறிப் பொங்கல் வைத்த காட்சியை எடுத்து விளக்குகிறது. அதுவே தமிழ் மரபு. தை மாதமே தமிழ்ப் புத்தாண்டு.

ஆனால் கால ஓட்டத்தில் ஆரியர்களும், பிறகு வந்த நாயக்கர்களும் நம் மரபில் பல்வேறு திரிபுகளை ஏற்படுத்தி, மொழிக் கலப்புச் செய்து நம் பண்பாட்டைக் குலைத்தனர். அவற்றுள் ஒன்றுதான் இந்தப் புத்தாண்டுத் திரிபு.

பொதுவாக ஆண்டு என்றால் ஏதேனும் ஓர் இடத்தில் தொடங்கி வளர்ந்துகொண்டே போக வேண்டும். இன்று உலகின் பல பகுதிகளில் உள்ள ஆண்டுக் கணக்கு (2016, 2017, 2018...) கிரிகோரியன் நாட்காட்டியை (Gregorian calender) நாட்காட்டியை அடிதளமாகக் கொண்டது. தொடக்கத்தில் ஆண்டிற்குப் பத்து மாதங்களே கணக்கில் இருந்தன. கி.மு. 45, ரோமானியப் பேரரசர் ஜூலியஸ் சீசரின் காலத்தில் ஜூலை மாதம் சேர்க்கப்பட்டு அது ஜூலியன் நாட்காட்டி என்று வழங்கப்பட்டது. பிறகு அகஸ்டஸ் சீசர் காலத்தில் ஆகஸ்ட் மாதம் உருவாக்கபட்டு இன்றுள்ள 12 மாதங்கள் வழக்கிற்கு வந்தன.

இது தவிர, அவரவர் மரபு, பண்பாட்டிற்கேற்ப இஸ்லாமிய நாட்காட்டி, ஈரானிய நாட்காட்டி எனப் பல்வேறு நாட்காட்டிகள் உலகில் உள்ளன.

நம் இனத்திற்கு எது அல்லது யார் அடையாளம்? சித்திரையில் பிறந்தவர் யார், அல்லது அறுவடை நடப்பது சித்திரை மாதமா? அவர்கள் மொழியிலேயே சொல்லவேண்டுமானால், தாட்சாயணக் கணக்கைப் பார்ப்பதா, உத்தராயணக் கணக்கைப் பார்ப்பதா? உத்தர் என்றால் மேலே அல்லது வடக்கே என்று பொருள். அதனால்தான் வடக்கில் மேலே உள்ள பகுதியை உத்தரப் பிரதேசம் என்று அழைக்கிறார்கள்.

இவை ஒரு புறமிருக்க, தமிழ் ஆண்டு என்று ஆளுநர் உள்ளிட்டோர் கூறும் ஆண்டுக் கணக்கு வளரும் தன்மையுடையதன்று, சுழலும் தன்மையுடையது. 60 ஆண்டுகள் முடிந்தபின், மீண்டும் பழைய இடத்திற்கே அது வந்துவிடும். ஒருவர் விளம்பி ஆண்டில் பிறந்தவர் என்றால், எந்த விளம்பி என்று எப்படிக் கண்டுபிடிப்பது? 2000 ஆண்டுகளில் எத்தனையோ விளம்பிகள் வந்துபோயிருக்கும். எந்த விளம்பியை விளம்புவது நாம்?

அடுத்ததாக, அவர்கள் கூறும் 60 தமிழ் ஆண்டுகளின் பெயர்களில் ஒன்று கூடத் தமிழாக இல்லையே! தமிழன் தன் ஆண்டுகளுக்கு பெயர் வைப்பதற்குக் கூடச் சொல் இல்லாதவனா?

இந்த ஆண்டுகள் எப்படித் தோன்றின என்பதற்குச் சொல்லப்படும் கதைகளோ, அருவெறுப்பும், ஆபாசமும் கொண்டவைகளாக உள்ளன. தமிழ் மரபுக்கும், பண்பாட்டிற்கும் நேர் எதிரானவை அவை. வேண்டுமானால் ஆளுநர் புரோகித் தன் சொந்த மண்ணில் இந்த ஆய்வுகளை நடத்திக் கொள்ளட்டும்.

நாம் அனைவரும் தமிழர்கள். நமக்கு மரபு உண்டு, பண்பாடு உண்டு, வரலாறும் உண்டு. நமக்கான ஆண்டுக் கணக்குகளை வரையறுத்துத் தரும் வல்லமைகொண்ட நல்லறிஞர்களும் உண்டு. எங்களுக்காக, பன்வாரிலால் புரோகித்கள் கவலைப்பட வேண்டாம்.

**- நன்றி முரசொலி**

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.